**சுருக்கம்**

சட்டக் கல்வித் துறை –செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி – 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் "Criminal Law with Cyber Crime" என்ற பாடப்பிரிவில் முதுகலை (எல்.எல்.எம்) சட்டப்படிப்பு துவக்கிட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சட்ட (சக)த்துறை**

அரசாணை (நிலை) எண்.151

நாள் 24.04.2017.
ஹேவிளம்பி வருடம் – சித்திரை – 11
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண் 2827/அ3/2016, நாள் 07.12.2016.

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், சட்டக்கல்வி இயக்குநர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வந்த செங்கல்பட்டு சட்டக்கல்லூரியானது 2005–2006–ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக்கல்லூரியாக மாற்றி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், மேலும், அக்கல்லூரிக்கென 2008–2009ஆம் கல்வியாண்டில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, தற்சமயம், அக்கல்லூரியில் இளங்கலை (Under Graduate) படிப்புகளான ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

2. சட்டக்கல்வி இயக்குநர், மேலும் தனது கடிதத்தில், ஒவ்வொரு ஆண்டும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் இளங்கலை சட்டப் படிப்பின் இறுதியாண்டில் 70 விழுக்காடு மாணவர்கள் தேர்ச்சி பெற்று வழக்குரைஞராகப் பதிவு செய்வதாகவும், அவர்களுள் பெரும்பாலானோர் அக்கல்லூரியில் முதுகலை (எல்.எல்.எம்.) சட்டப்படிப்பு இல்லாத காரணத்தால், வேறு அரசு சட்டக் கல்லூரிக்கு சென்று பயில வேண்டி உள்ளதாகவும் எனவே, அக்கல்லூரியில் முதுகலை சட்டப் படிப்பினை தொடங்கிட இறுதியாண்டு மாணவர்களால் தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். மேலும், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியானது பல்கலைக்கழக மானியக்குழு சட்டப்பிரிவுகள் 2(f) மற்றும் 12(b)-இன் கீழ் அங்கீகாரம் பெற்ற கல்லூரி என்பதால், முதுகலை சட்டப்படிப்பு கொண்டு வர முழுமையான தகுதிபெற்றுள்ளதாகவும், எனவே, அனைவராலும் அதிக அளவில் கோரப்படும் படிப்பான "Criminal Law with Cyber Crime" என்ற முதுகலை சட்டப்படிப்பினை (எல்.எல்.எம்.) துவக்கி, அப்பிரிவில் 20 இடங்களை தோற்றுவித்தும், மேலும், அப்பாடத்திற்கென நூல்கள் வாங்கிட மட்டும் தொடரா செலவினமாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்திடுமாறும் அரசைக் கோரியுள்ளார்.

3. சட்டக்கல்வி இயக்குநரின் கோரிக்கை அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் அக்கல்லூரியில் "Criminal Law with Cyber Crime" என்ற பாடப்பிரிவில் முதுகலை (எல்.எல்.எம்.) சட்டப் படிப்பினை துவக்கிட சட்டக்கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கியும், அப்பாடப்பிரிவுக்கென 20 இடங்களை தோற்றுவித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்சொன்ன "Criminal Law with Cyber Crime" பாடத்திற்கு, நூல்கள் வாங்கிடும் வகைக்கென தொடரா செலவினமாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 – பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103. அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள் – AE சட்டக்கல்லூரிகள் – 68 புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு (த.தொ.கு. 2202 – 03 – 103 – AE – 6801).".

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி 2017–2018–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள், இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறார். இச்செலவினம் 2017–2018–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் அரசு நிதி (உள்–II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி மூன்றில் அனுமதி வழங்கப்பட்டுள்ள "Criminal Law with Cyber Crime" முதுகலை (எல்.எல்.எம்) சட்ட பாடப்பிரிவிற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவைப் பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டு கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா. எண்.18134/உள்–II/2017, நாள் 21.04.2017–இல் பெறப்பட்ட அத்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.254 (இரு நூற்று ஐம்பத்து நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்(பொ)

<u>பெறுநர்</u>

1. சட்டக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. முதல்வர், அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு
   (சட்டக் கல்வி இயக்குநர் மூலமாக )
3. பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம்,
   சென்னை – 600 028.
4. சார் கருவூல அலுவலர், செங்கல்பட்டு.

<u>நகல்</u>

1. நிதி (உள்–II/வ.செ.பொ–II)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை)
   அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாநில கணக்காயர், சென்னை –600 018 / 600 035.
4. இருப்பிடத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

24/4/17

பிரிவு அலுவலர்.